I Additional District Court, Thoothukudi.

S.C.No.166/2024 நாள் : 22.01.2025

அ.சா.3– திருமதி. செண்பகநாச்சியார்.

**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

என் தகப்பனார் ரியல் எஸ்டேட் மற்றும் வட்டி தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். 2ம் எதிரியும் ரியல் எஸ்டேட் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். அசா2 எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் சரிதான். ஹண்டாய் நிறுவனத்தில் மாத சம்பளத்திற்கு வேலை செய்து வருகிறார். நானும், 2ம் எதிரியும், என் பிள்ளைகளும் தனிக் குடித்தனம் என்றும், என் பெற்றோரும் அசா2ம் தனிக் குடித்தனம் என்றும் சொன்னால் சரிதான். என் தகப்பனாரின் தொழில் மற்றும் வரவு செலவுகள் தனி என்றும், 2ம் எதிரியின் தொழில் மற்றும் வரவு செலவுகள் தனி என்றும் சொன்னால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்த வரையில் அசா1 என் பெற்றோர் வீட்டிற்கு வரமாட்டார் என்றால் சரிதான். அசா1 தனியாக ரியல் எஸ்டேட் மற்றும் வட்டித் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். அதனால் அசா1க்கும், என் தகப்பனாருக்கும் தொழில் ரீதியாக போட்டி இருக்கும் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்தபிறகு அசா1 என் பெற்றோர் வீட்டிற்கு வந்து செல்கிறார். என் தகப்பனார் விட்டு சென்ற ரியல் எஸ்டேட் மற்றும் வட்டி தொழிலை அசா1 பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. அசா2க்கும், என் தகப்பனாருக்கும் அவ்வப்போது கருத்து வேறுபாடு இருந்து வந்தது. நான் தற்போது அசா2ன் பாதுகாப்பில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். அசா2 எப்போதும் அசா1ன் பேச்சை கேட்டுக் கொண்டு நடப்பார் என்றால் சரியல்ல. அசா2 எப்போதும் அசா1ன் ஆலோசனைப்படி தொழில் செய்து வருகிறார் என்றும், நீதிமன்றத்திலும் அசா1ன்

ஆலோசனைப்படி சாட்சியம் அளித்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எப்படி சாட்சியம் அளிக்க வேண்டுமென்று அசா2 என்னிடம் சொல்லவில்லை. நான் 2ம் எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தால் நான் என் பெற்றோர் வீட்டில் இருக்க முடியாது என்றால் சரிதான். அதனால் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் அசா1, 2 சொல்லி கொடுத்தபடி நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீஸ் விசாரணையில் என் தகப்பனார் ரியல் எஸ்டேட் தொழில் செய்ததாகவும், 2ம் எதிரியும் என் தகப்பனாருடன் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததாகவும் சொல்லியுள்ளேன். இந்த வழக்கு விபத்து நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக 28.03.2024 அன்று என் தகப்பனார் 2ம் எதியிடம் ரூ.3 கோடி கொடுத்திருப்பதாக என் தாயாரிடமும், அசா2 மற்றும் என் தகப்பனாரின் நண்பர் ரவிக்குமார் என்பவரிடமும் என் தகப்பனார் சொல்லியுள்ளார் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன். பணம் என்றால் என் தகப்பனார் கராராக இருப்பார் என்றும் சொல்லியுள்ளேன். 01.04.2024 அன்று 2ம் எதிரி என் தகப்பனாரு்க்கு எட்டையபுரம் வந்து 2ம் எதிரியின் நண்பர் என் தகப்பனாருக்கு ரூ.15 லட்சம் மற்றும் வட்டி ரூ. 50 ஆயிரம் தருவதாகவும் அதை என் தகப்பனார் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் 2ம் எதிரி தகவல் சொன்னதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். அதனால் என் தகப்பனார் இருசக்கர வாகனத்தில் ஒரு கட்டை பையுடன் எட்டையபுரம் நோக்கி சென்றதாகவும் சொன்னேன். என் தகப்பனார் இருசக்கர வாகனத்துடன் ஆள் யாராவது வருகிறார்களா என்று பார்ப்பதற்காக நின்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்புறமாக லாரியை

ஓட்டி வந்து மோதி என் தகப்பனாரை கொலை செய்துவிட்டார்கள் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எட்டையபுரத்தில் உள்ள சியாமளா பெட்ரோல் நிலையத்தில் 1 முதல் 3 எதிரிகள் பேசிக் கொண்டிருந்தபோது அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். விபத்து குறித்து 2ம் எதிரி எனக்கு மாலை 6 மணியளவில் கைபேசி மூலம் என் தகப்பனாருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னதாகவும் எங்கள் குடும்பத்தில் பெண்கள் யாரும் வரவேண்டாம் என்று 2ம் எதிரி சொன்னதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரிகள் சதித்திட்டம் தீட்டி என் தகப்பனாருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் இருப்பதற்காக என் தகப்பனாரை லாரி வைத்து கொன்றதாக அசா2க்கு போலீசார் சொல்லி அசா2 எனக்கு சொன்னதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு என் தாயாருடனும், அசா2 உடனும் இணக்கமான சூழ்நிலையில் இருந்ததில்லை என்றால் என் தம்பி உடன் இணக்கமாக இருந்ததில்லை. என் தகப்பனார் இருக்கும் காலத்தில் அசா2 தனக்கென்று ஒரு அடையாளம் வேண்டுமென்றும், அதற்கு ஒருதொழில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் என் தகப்பனாரை கேட்டு கொண்டுவந்தார் என்றால் சரிதான். அதற்கு என் தகப்பனார் ஒப்புதல் கொடுக்கவில்லை என்றும், தொழிலும் வைத்து கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். அதனால் அசா2 என் தாயாரிடமும், என்னிடமும், 2ம் எதிரியிடமும் என் தகப்பனார் தொழில் வைத்துக் கொடுக்கவில்லை என்று சொல்லி தனக்கு தொழில் வைத்துக் கொடுக்க என் தகப்பனாருக்கு பரிந்துரையும் செய்யமாட்டேன் என்கிறீர்கள் என்றும் எங்களிடம் சொல்லிக் கொண்டு வந்தார் என்றால் சரிதான். அதனால் அசா2 வீட்டில்

கோபித்துக் கொண்டு வெளியில் சென்று தங்குவதையும் வழக்கமாக்கி கொண்டார் என்றால் சரிதான். அப்படி அவர் தோணுகால் ரோட்டில் தனியாக அறை எடுத்து தங்கியிருந்தார் என்றால் தன் வேலை காரணமாக அங்கு தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த இடத்திற்கும், என் பெற்றோர் வீட்டிற்கும் இடையில் சுமார் 250 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். ஹண்டாய் நிறுவனம் புறவழி சாலையில் என் பெற்றோர் வீட்டிலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்திற்குள் உள்ளது என்றால் சரிதான். அசா2 வெளியில் இருந்த காலத்தில் அசா1 உடன் இணக்கமாக இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் என் தகப்பனாருடன் இருந்ததை விட அசா1 உடன் இணக்கமாக இருந்தார். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் தன் குடும்பத்தாருடன் தன் வரவு செலவு கணக்குகளை பகிர்ந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலும் வரவு செலவு கணக்குகளை சொல்லவில்லை என்றும், அவர் இறந்தபிறகும் வரவு செலவு கணக்குகளை சொல்லாமல் தன்னை இடையூறு செய்து இறந்துவிட்டதாகவும் சொல்லிவருகிறார் என்றால் சரிதான். என் தகப்பனார் அவருக்கு உண்டான வரவு செலவு கணக்குக்கான ஆவணங்களை தனி பீரோவில் வைத்து பூட்டி சாவியை தன்னுடனே வைத்துக் கொள்வார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் உடைமைகளை போலீசார் எங்களிடம் கொடுத்துவிட்டார்களா என்றால் 2ம் எதிரி சிறைக்கு சென்றபிறகு 10 நாட்கள் கழித்து எங்களிடம் கொடுத்துவிட்டார்கள். 02.04.2024 அன்று என் தகப்பனாருக்கு இறுதி சடங்குகள் செய்யப்பட்டது. 03.04.2024 அன்று தீ ஆற்றுதல் சடங்கு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த சடங்கு மதியம் 1 மணியளவு வரை நடந்து என்றால் சரிதான். அந்த சடங்கு நடந்த பிறகு போலீசார் 2ம் எதிரியை விசாரணைக்காக காவல்நிலையம் அழைத்துச் சென்றார்கள்

என்றால் சரிதான். அன்று விசாரணைக்கு சென்ற 2ம் எதிரி இன்றுவரையில் வரவில்லை என்றால் சரிதான். இன்றைய வரையில் 2ம் எதிரி சிறையில் இருந்து வருகிறார். நாங்கள் குடியிருக்கும் வீட்டை எழுதிக் கொடுத்த நபர் கடனுக்காகத்தான் எழுதிக் கொடுத்ததாக சொல்லி அவருக்கும், என் தகப்பனாருக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் எனக்கு தெரியாது. கோவில்பட்டி கம்மவார் கல்யாண மண்டபத்திற்கு பின்புறமாக உள்ள வீட்டை என் தகப்பனார் வாங்கியதால் அந்த வீட்டை இன்றுவரையில் சுவாதீனம் எடுக்கமுடியாமல் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். அப்பனேரி கிராமத்தில் ஏழாயிரம் பண்ணை சாலையில் என் தகப்பனார் சுமார் 6 ஏக்கர் இடம் குறித்து ஒரு நபருக்கு கிரைய ஒப்பந்தம் போட்டு முன்பணம் வாங்கி அவருக்கு கிரையம் செய்து கொடுக்காமல் வேறு ஒரு நபருக்கு கிரையம் செய்து கொடுத்ததால் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். கிருஷ்ணாநகரில் பத்மாவதி என்ற ஒரு நபருக்கு ஒரு சொத்தை கொடுத்த அதை என் தகப்பனார் திருப்பி கேட்டு அவர் கொடுக்க மறுத்ததால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பத்மாவதியுடன் என் தகப்பனார் சுமூகமாக இருப்பதை கண்டு என் தாயாருக்கும், தகப்பனாருக்கும் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. அசா1 அப்பனேரி கிராமத்தில் இருந்து வருகிறார். மேற்படி 6 ஏக்கர் நிலத்தை வாங்கிய திருமுருகன் என்பவரும் அப்பனேரி கிராமத்தில் இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அசா1 காவல்துறையிலும், வருவாய்துறையிலும் நெருக்கமாக இருந்து வருகிறார் என்றால் சரிதான். வருவாய்துறை சார்ந்த பிரச்சனைகளை இலகுவாக கையாண்டு பட்டா மாற்றம் செய்வது குறித்து ஏற்பாடு செய்து கொடுப்பார் என்றால் சரிதான். மேற்படி 6 ஏக்கர் நிலம் குறித்து கிரைய ஒப்பந்தம் பெற்ற

நபர் என் தகப்பனார் மீதும், கிரையம் பெற்ற நபர் மீதும் தூரத்துக்குடி 2 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. அசா1 உடன் மேற்படி திருமுருகன் பேருந்து உரிமையாளரும் என் தகப்பனாருக்கு எதிராக காவல்நிலையம் சென்று வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தம் போட்ட நபர் பாக்கி தொகையை கொடுத்தால் அவருக்கே கிரையம் செய்து கொடுப்பதாக அசா2 உறுதியளித்துள்ளார் என்றால் தவறு. அதற்கான பேச்சுவார்த்தையை அசா1 நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் விட்டு சென்ற சொத்துக்களையும், தொழில்களையும் பராமரிப்பதற்கான ஆவணங்களை தயாரிப்பதற்காக அசா1ன் ஆலோசனையை அசா2 கேட்டு வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அசா2 அவர் செய்யும் நடவடிக்கைகளை அவரது தகப்பனாரைப் போலவே மற்றவரிடம் பகிர்ந்து கொள்ளமாட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்தபிறகு என்னிடமும், என் தாயாரிடமும் 3ம் நபர்களும், உறவினர்களும் பேசக்கூடாது என்று அசா2 கட்டுப்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் சொத்துக்கள் மற்றும் தொழில்களை அசா2 கைப்பற்றுவதற்கு 2ம் எதிரி தடையாக இருப்பார் என்ற எண்ணத்தில் அசா1ன் துணையுடன் எதிர்பாராத விதமாக நடந்த விபத்தை பயன்படுத்தி 2ம் எதிரியை மேற்படி தொழில்களிலும், சொத்துக்களிலும் தலையிடக்கூடாது என்ற எண்ணத்தில் அசா2 எனக்கு சொல்லிக் கொடுத்தற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றம் வரும்வரையில் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்னையும், அசா1, 2-யும் வழி நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி புலன் விசாரணை அதிகாரி என் தகப்பனாரின் சொந்த

ஊரான களப்பாளன் குளத்திற்கு அருகில் உள்ள பனைவடலி சத்திரத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் தேவர் இனத்தில் ஒரே கிளை பிரிவை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. அசா2 ஐ, அசா1 தன் வசப்படுத்தி இவ்வழக்கில் தவறான ஆவணங்களையும் ஏற்படுத்திக் கொண்டு மேற்படி ஆய்வாளர் மூலம் பொய்யாக இந்த வழக்கை புனைந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு போலீசார் ஆவணங்களை காட்டி தெரிவித்த பிறகுதான் இந்த வழக்கில் என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியம் பொய்யானவை என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.01.22 19:32:56 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.